S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products AUTHORISED SERVICE PROVIDER
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு” திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE செவ்வாய் அக்டோபர் 28 * 2025 * மலர் -1 * இதழ்-148 * VOL-1 * ISSUE-148 விலை ரூ.3 * பக்கம் -4



### மாமல்லபுரத்தில் சந்திப்பு:

# கரூர் நெரிசலில் உயிரிழந்த இறந்தவர் குடும்பத்தினருக்கு விஜய் நேரில் ஆறுதல்!

## காயமடைந்தவர்களுக்கும் தலா ரூ.2 லட்சம் நிவாரண உதவி!!

**சென்னை, அக்.28**

கரூரில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை மாமல்லபுரத்திற்கு அழைத்து வந்து விஜய் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். அத்துடன் காயம் அடைந்தவர்களுக்கும் தலா ரூ.2 லட்சம் நிவாரண உதவிகளை வழங்கினார்.

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் கடந்த செப்டம்பர் மாதம் 27–ஆம் தேதி கரூரில் பிரசாரம் செய்தார்.

அப்போது பயங்கர கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதில் 41 பேர் பலியானார்கள். அதில் ஒரே வீட்டில் 2 பெண் குழந்தைகளும் அடங்கும். இதைத் தவிர நூற்றுக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

இந்த சம்பவத்தையடுத்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உடனடியாக சென்று பார்வையிட்டார். அத்துடன் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.10 லட்சம் வழங்கப்படும் என அறிவித்தார். காயம் அடைந்தவர்களுக்கு ரூ.1 லட்சம் அறிவிக்கப்பட்டது. அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்பட பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் நேரில் சென்றார்கள். சில கட்சியினர் நிவாரண உதவிகளையும் அறிவித்தனர்.

மத்திய அரசு சார்பிலும் தலா ரூ.2 லட்சம் வழங்கப்படும் என பிரதமர் மோடி அறிவித்தார்.

அந்த தொகையும் சமீபத்தில் வழங்கப்பட்டது.

ஆனால் விஜய் கட்சியினர் யாரும் உடனடியாக நேரில் செல்லவில்லை. விஜயும் செல்லவில்லை. எனவே பாதிக்கப்பட்டவர்களுடன் விஜய் தொலைபேசி மூலமே தொடர்புகொண்டு ஆறுதல் கூறினார். விரைவில் நேரில் சந்திப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதற்காக அனுமதி கேட்டு போலீசில் மனுவும் அளிக்கப்பட்டது. ஆனால் இதுவரை அனுமதிவழங்கப்படவில்லை. இதையடுத்து பாதிக்கப்பட்ட மக்களை சென்னைக்கே நேரில் அழைத்து ஆறுதல் கூற திட்டமிட்டார்.

ஏற்கனவே உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.20 லட்சம் வழங்கப்படும் என்றும், காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.2 லட்சம் வழங்கப்படும் என்றும் விஜய் அறிவித்திருந்தார்.

அதன்படி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மட்டும் அவரவர் வங்கிக் கணக்கில் தலா ரூ.20 லட்சம் வழங்கப்பட்டது. ஆனால் காயம் அடைந்தவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட எல்லோரையும் மாமல்லபுரத்திற்கு அழைத்துவர ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி அங்குள்ள நட்சத்திர விடுதியில் 50–க்கும் மேற்பட்ட அறைகள் முன்பதிவு செய்யப்பட்டன.

நேற்றே சிறப்பு பஸ் மூலம் அழைத்துவரும் பணி தொடங்கியது. உயிரிழந்த குடும்பத்தினரில் முதலில் 34 பேரின் குடும்பத்தினரும், பின்னர் மேலும் 3 பேரின் குடும்பத்தினரும் என மொத்தம் 37 குடும்பத்தினர் வந்துள்ளார்கள்.

இன்னும் 3 பேரின் குடும்பத்தினர் இன்று காலையில் 30–ஆவது நாள் நினைவு நிகழ்ச்சியை முடித்துவிட்டு திருச்சியில் இருந்து விமானம் மூலம் வரவும் திட்டமிட்டிருப்பதாக கூறப்படுகிறது.

அதே நேரத்தில் காயம் அடைந்தவர்களும், அவர்களது குடும்பத்தினரும் வரவழைக்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் மொத்தம் 235 பேர் அழைத்து வரப்பட்டார்கள்.

அவர்கள் அனைவரும் மாமல்லபுரம் நட்சத்திர ஓட்டல் விடுதி அறைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை விஜய் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். அத்துடன் காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.2 லட்சம் நிவாரண உதவிகளையும் வழங்கினார்.

மாமல்லபுரத்திற்கு விஜய் வருவதை முன்னிட்டு அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்த சந்திப்பு ஏற்பாடுகளை ஆதவ் அர்ஜூன் செய்துள்ளார்.

நட்சத்திர ஓட்டல் முழுவதும் தனியார் பாதுகாவலர்கள் நிறுத்தப்பட்டு ள்ளார்கள். பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை.

துக்க சந்திப்பு நிகழ்ச்சி என்பதால் விஜயை வரவேற்கும் வகையில் விளம்பரமோ, பேனர்களோ வைக்கப்படவில்லை. கட்சி நிர்வாகிகளும் அனுமதிக்கப்படவில்லை.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முகாம் அலுவலகத்தில், ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த கபடி வீராங்கனை கார்த்திகா ரமேஷ்க்கு ஊக்கத்தொகையாக ரூபாய் 25 இலட்சத்திற்கான காசோலையை வழங்கி, வாழ்த்தினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பயிற்சியாளர்கள் ம.ராஜேஷ், நாகராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.



சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். உடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செண்பக வள்ளி உள்ளார்.

### கந்த சஷ்டி விழா:

# திருச்செந்தூர் முருகன் கோவில் சூரசம்ஹாரம்!

## லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்தனர்!!

**திருச்செந்தூர்.அக்.28–**

சுப்பிரமணிய சுவாமி கோவில் கந்த சஷ்டி திருவிழா சூரசம்ஹாரம் இன்று மாலை கோவில் கடற்கரையில் நடக்கிறது குவிந்து வருகின்றனர்.

முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் நடைபெறும் பல்வேறு திருவிழாக்களில் பிரசித்தி பெற்ற திருவிழாவான கந்த சஷ்டி திருவிழா கடந்த 22–ம் தேதி யாகசாலை பூஜையுடன் தொடங்கி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 7–வது நாளான இன்று கோவில் நடை அதிகாலை 1மணிக்கு திறக்கப்பட்டது. 1.30 விஸ்வரூப தீபாராதனையும், 2 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் நடைபெற்றது.

காலை 7 மணிக்கு யாகபூஜை தொடங்கியது. 9 மணிக்கு உச்சி கால அபிஷேகம் நடைபெறுகிறது. அதனைத் தொடர்ந்து யாகசாலையில் சுவாமி ஜெயந்திநாதருக்கு



தீபாராதனை நடைபெற உள்ளது. இதனையடுத்து 12.45 மணிக்கு சுவாமி ஜெயந்திநாதர் தங்க சப்பரத்தில் எழுந்தருளி சண்முகவிலாசமண்டபம் வருகிறார். அங்கு மகா தீபாராதனை நடக்கிறது. இதனையடுத்து 2.00 மணிக்கு திருவாவடுதுறை ஆதீனம் சஷ்டி மண்டபத்தில் வைத்து சுவாமி ஜெயந்திநாதருக்கு மாவு பொடி, மஞ்சள் பொடி, திரவிய பொடி உள்பட பல்வேறு அபிஷேக பொருட்களால் அபிஷேகம் நடைபெற்று அலங்கார தீபாராதனைக்கு பின்னர் 4.30மணிக்கு சுவாமி ஜெயந்தி நாதர் கடற்கரையில் எழுந்தருளுகிறார். அங்கு சுவாமி ஜெயந்திநாதர் தன்னிடம் போரிட வரும் யானை முகம் கொண்ட சூரனையும், அடுத்து சிங்கமுகனையும், மூன்றாவதாக தன் முகம் கொண்ட சூரனையும் தன் வேலால் வதம் செய்கிறார். இறுதியில் மரமாக மாறிய சூரனை சுவாமி ஜெயந்தி நாதர் சேவலாகவும், மயிலாகவும் மாற்றி தன்னோடு ஜக்கியமாக்கி கொள்ளும் நிகழ்ச்சி நடக்கிறது.

இதில் பல லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள். சைபர் கிரைம் ஏ.டி.ஜி.பி. சந்திப் மிட்டல் தலைமையில் 4,000 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் கடற்கரையில் உயர் கோபுரங்கள், 250 கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது. இரண்டு ஹெலிகேம் கேமரா இவற்றின் மூலம் கண்காணிக்க தனி கட்டுப்பாட்டறை அமைக்கப்பட்டு போலீசார் கண்காணித்து வருகின்றனர். கடலில் புனித நீராடும் பக்தர்கள் பாதுகாப்பிற்காக கடலில் தடுப்புகள் அமைத்து 8 பைபர் படகுடன் கடலோர பாதுகாப்பு குழும போலிசார், மற்றும் நீச்சல் வீரர்கள் உட்பட 80 பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். அவசர தேவைகளுக்காக 14 ஆம்புலன்ஸ்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. 400 கழிவறைகள் அமைக்கப்பட்டுள்ளது. 650 தூய்மை பணியாளர்கள் பணிகள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

தமிழகத்தின் பல்வேறு பகுதியிலிருந்து 450 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளது. மூன்று தற்காலிக பேருந்து நிறுத்தங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தற்காலிக பேருந்து நிறுத்தத்தில் இருந்து கோவிலுக்கு செல்ல 45 இலவச பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்திற்கு இன்று உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இந்த திருவிழா காண ஏற்பாடுகளை கோவில் தக்கார் அருள் முருகன், இணை ஆணையர் ராமு, மற்றும் கோவில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

# காங்கிரஸ் வென்ற 10 தொகுதிகளை குறிவைக்கும் தி.மு.க !

**சென்னை, அக். 28**

தி.மு.க கூட்டணியில் காங்கிரஸ் கட்சி அங்கம் வகித்து வருகிறது. கடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க கூட்டணியில் 25 தொகுதிகளில் போட்டியிட்டு 18 தொகுதிகளில் வெற்றி பெற்றது. தற்போது, 2026 சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள அனைத்து கட்சிகளும் தீவிரமாக பணியாற்றி வருகிறது. இந்தநிலை யில், மீண்டும் ஆட்சியை கைப்பற்ற தி.மு.க பல்வேறு வியூகங்களை வகுத்து வருகிறது.

அதன்படி, 234 தொகுதிகளில் கள ஆய்வு செய்து வருகிறது. இதனை உளவுத்துறை, மற்றும் பென் நிறுவனம் செய்து வருகிறது. அந்த ஆய்வின் போது,

கடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் போட்டியிட்டு வெற்றி பெற்ற 18 தொகுதிகளில் 8 முதல் 10 வரை உள்ள தொகுதியில் காங்கிரஸ் எம்.எல்.ஏ மீது அதிருப்தி உள்ளதாகவும், அதுமட்டுமின்றி அந்த தொகுதிகளில் தி.மு.க.வில் உள்ள முக்கிய பிரபலங்கள்

வாய்ப்பு கேட்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. எனவே, சொந்த கட்சிக்காரர்களை திருப்திப்படுத்தவும், அந்த தொகுதிகளை கைப்பற்றவும் தி.மு.க முனைப்பு காட்டி வருகிறது. தி.மு.க.வின் இந்த முடிவு காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

### ஆண்டிபட்டி அருகே

# கிணற்றில் குதித்து விவசாயி தற்கொலை!

## போலீசார் விசாரணை!!

**தேனி,அக்.28–**

ஆண்டிபட்டி அருகேகிணற்றில் குதித்து விவசாயி தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தேனி மாவட்டம் ராஜதானி அருகே சேவா நிலையம் பகுதியைச் சேர்ந்தவர் கூலாஸ் தேவர் மகன் விவசாயி முத்தையா (65). அப்பகுதியில் உள்ள தோட்டத்து வீட்டில் குடும்பத்துடன் தங்கி விவசாயம் செய்து வந்தார்.

சம்பவத்தன்று இரவு இவருக்கு வலிப்பு, அதிகமானதால் அவரை தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். பின்னர் சிகிச்சை முடிந்து, தோட்டத்து வீட்டிற்கு சென்ற முத்தையா, தண்ணீர் இல்லாமல் இருந்து 100 அடி ஆழ முள்ள கிணற்றில் குதித்தார்.

தீயணைப்பு துறையினர் மூலமாக அவரை மீட்டு சிகிச்சைக்காக தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இந்த சம்பவம் குறித்து இராஜதானி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



### மோன்தா புயல் எதிரொலி:

# தமிழக துறைமுகங்களில் 2ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்!

**சென்னை,அக்.28**

வங்கக்கடலில் உருவாகி நிலைகொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் புயலாக வலுப்பெற்றது. இந்த புயலுக்கு மோன்தா என பெயரிடப்பட்டுள்ளது.

மோன்தா புயல் நாளை மாலை அல்லது இரவில் தீவிர புயலாக வலுப்பெற்று ஆந்திராவின் மச்சிலிப்பட்டினம் கலிங்கப்பட்டினம் இடையே கரையை கடக்க வாய்ப்பு உள்ளது என்றும் புயல் கரையைக் கடக்கும்போது அதிகபட்சமாக மணிக்கு 110 கி.மீ. வேகத்தில் காற்று வீசக் கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வங்கக்கடலில் மோன்தா புயல் புயல் உருவாகி உள்ள நிலையில் தமிழக துறைமுகங்களில் 2ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

சென்னை, கடலூர், எண்ணூர், காட்டுப்பள்ளி, புதுச்சேரி, காரைக்கால், நாகை, பாம்பன், தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களில் 2ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

சென்னைக்கு கிழக்கே வங்கக்கடலில் 600 கி.மீ. தொலைவில் மோன்தா புயல் மையம் கொண்டுள்ளது.

# தங்கம் விலை 'திடீர்' சரிவு!

**சென்னை, அக். 28**

சென்னையில் நேற்று (அக் 27) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.400 குறைந்தது ஒரு பவுன் ரூ.91.600க்கு விற்பனை செய்யப்படுகிறது. சர்வதேச நிலவரங்களால் கடந்த ஒரு வாரமாக, நம் நாட்டில் தங்கம் விலையில் அதிக ஏற்ற, இறக்கம் காணப்படுகிறது. தமிழகத்தில் நேற்று முன்தினம் (சனிக்கிழமை), தங்கம் விலை கிராமுக்கு 100 ரூபாய் உயர்ந்து, 11,500 ரூபாய்க்கு விற்பனையானது. சவரனுக்கு 800 ரூபாய் அதிகரித்து, 92,000 ரூபாய்க்கு விற்கப்பட்டது. வெள்ளி விலையில் மாற்றமில்லை. நேற்று விடுமுறை தினம் என்பதால் தங்கம் விலையில் மாற்றமில்லை. இந்நிலையில் இன்று (அக் 27) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.400 குறைந்து ஒரு பவுன் ரூ.91.600க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.50 குறைந்து ஒரு கிராம் ரூ.11450க்கு விற்பனை ஆகிறது. வெள்ளி விலையில் மாற்றமில்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.170க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வார தொடக்க நாளில் தங்கம் விலை பவுனுக்கு ரூ.400 குறைந்து, நகைப்பிரியர்களுக்கு சற்று ஆறுதலை கொடுத்துள்ளது.



திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி முன்னிலையில் பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி தங்களை கழகத்தில் இணைந்து கொண்டனர். திருப்பத்தூரில் ஆவின் பால் கடை நடத்தி வரும் திவாகர் தலைமையில் 100க்கும் மேற்பட்ட இளைஞர்கள் தங்களை திமுக கழகத்தில் இணைத்துக் கொண்டார்கள். இதில் திருப்பத்தூர் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் M.ராஜேந்திரன், கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் இருந்தார்கள்.

## திருவெண்ணெய்நல்லூர் தெற்கு பா.ம.க.போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி!



உளுந்தூர்பேட்டை, அக்.28–

திருவெண்ணைநல்லூர் ஒன்றியத்தில் இயங்கி வரும் செங்கல்வராயன் கூட்டுறவுசர்க்கரை ஆலையில் சுமார் 30 வருடங்களாக தற்காலிக பணியாளராக பணியாற்றி வந்த அருணாச்சலம் மகன் அம்பாயிரம் என்பவர் ஆலையில் வேலை செய்து கொண்டிருக்கும்பொழுது மர்மமான முறையில் இறந்து கிடந்துள்ளார் உரிய நீதி கேட்டு ஆலை நிர்வாகத்தை கண்டித்து பாட்டாளி தொழிற்சங்கம் மற்றும் கள்ளக்குறிச்சி கிழக்கு மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக ஆலை முன்பு போராட்டம்நடத்த முடிவு செய்தது.

இதனை அறிந்த ஆலை நிர்வாகம் சுகு சுக சுகம் சுமூகமான முறையில் பேசி முடிவு செய்வதற்கு அழைப்பு விடுக்க ப்பட்டது பாதிக்கப்பட்ட குடும்பத்தாரையும் பாமக நிர்வாகிகளையும் அழைப்பு விடுக்கப்பட்டது. அதன் பெயரில் பாமக வழக்கறிஞர் அஜித் குமார் மற்றும்திருவெண்ணெய்நல்லூர் தெற்கு ஒன்றிய செயலாளர் சதீஷ் தலைமையில் மற்றும் பெரிய செவலை கிராம முக்கியஸ்தவர்கள் முன்னிலையில் சுமுகமான பேச்சுவார்த்தையில் முடிவு எடுக்கப்பட்டது. இதனால் குடும்பத்தில் ஒருவருக்கு வேலையும் நிர்வாகம் சார்பில் மூன்று லட்சம் பணமும் வழங்கப்படுவதாக ஒப்புக் கொண்டதன் பேரில் சுமுகமான முறையில் பேசி முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஈரோட்டில்

## 26 வருடங்களுக்குப் பிறகு முன்னாள் மாணவர்கள் சந்திப்பு!

ஈரோடு,அக்.28–

ஈரோடு பழைய பஸ் நிலையம் பகுதியில் அமைந்துள்ளது இ .கே எம் அப்துல் கனி மதரசா இஸ்லாமிய உயர்நிலைப் பள்ளி இப்பள்ளியில் கடந்த1998 1999 ஆம் ஆண்டு படித்த முன்னாள் மாணவ மாணவியர்கள் மீண்டும் மாணவர்கள் 99" என்ற தலைப்பில் சந்திப்பு நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது நிகழ்ச்சியில் பள்ளியின்துணைத்தலைவர்கலீல் தலைமைதாங்கினார். முன்னாள்மாணவ மாணவியர்கள் வரவேற்றனர். இதில் மருத்துவர் மனோகரன் வாழ்த்துரை வழங்கினார். நிகழ்ச்சியில் பள்ளி தலைமை ஆசிரியர் முகமது உதுமான் மற்றும் முன்னாள் ஆசிரியர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரைவழங்கினர் தொடர்ந்து முன்னாள் மாணவ மாணவியர்கள் பள்ளியின் விளை யாட்டு மைதானத்தை சீரமைப்பதற்காக ரூபாய் 30,000 மதிப்பில் மணல்களை வழங்கினர். விழா ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர்களான முன்னாள் மாணவ மாணவியர்கள் ஆர் என் முகமது சித்திக், வெங்கடேஸ்வரன், சலீம்யாசர், தனசேகரன், முஜிப் நூர் முகமது, அனார்அலி, சுமதி, காமியபானு ,வாசுகி, பசீரா, கோகிலவாணி , ஸ்ரீகலா, உஷா ஆகியோர் செய்திருந்தனர்.

## கோவை மருதமலை கோயிலில் சூரசம்ஹாரம் விழா!

### நேற்று மாலை நடந்தது!!

கோவை, அக்.28–

மருதமலை சுப்பிரமணிய சுவாமி கோயிலில் கந்தசஷ்டி விழாவின் பிரதான நிகழ்வான சூரசம்ஹாரம் நடந்தது.

கோவை மருதமலைசுப்பிரமணியசுவாமி கோயிலில் கந்தசஷ்டி விழா கோ பூஜையுடன் கடந்த 22 ந் தேதி தொடங்கியது. இதைத் தொடர்ந்து மூலவர் மற்றும் அனைத்து தெய்வங்களுக்கும் காப்பு கட்டப்பட்டது, பக்தர்களும் காப்பு கட்டி தங்களது விரதத்தைத் தொடங்கினர், கந்தசஷ்டி விழாவை முன்னிவட்டு நாள் தோறும் காலை 10 மணி முதல் பகல் 12 மணி வரையும், மாலை 5 மணி முதல் இரவு 7மணி வரையும் யாகசாலைபூஜை அபிஷேகபூஜை, சுவாமிதிருவீதி உலா ஆகியவை நடைபெற்று வந்தன,

இந்த நிலையில் கந்தசஷ்டியின் முக்கிய நிகழ்வான சூரசம்ஹாரம் இன்று நடைபெறுகிறது, இதையொட்டி காலை 6.30 மணி முதல் 7.30 மணிக்குள் மூலவருக்கு சண்முகார்ச்சனை,நடைபெற்றது,

11 மணி முதல் பகல் 12 மணிக்குள் உற்சவருக்கு சண்முகார்ச்சனை நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து மதியம் 3 மணிக்கு சூரசம்ஹாரம் நடைபெறுகிறது, மாலை 4 மணிக்கு சண்முகார்ச்சனை மற்றும் அபிஷேக நிகழ்ச்சி நடைபெறுகிறது.

நாளை ( செவ்வாய்க்கிழமை ) காலை 10.30 மணி முதல் 11.30 மணிக்குள் சுவாமிக்கு திருக்கல்யாணம் நடைபெற உள்ளது, பின்னர் சுவாமி திருவீதி உலக நிகழ்ச்சி நடைபெறுகிறது, விழாவையொட்டி இரண்டு நாட்கள் மலைக் கோயிலுக்கு இரண்டு , நான்கு சக்கர வாகனங்களில் செல்ல பக்தர்களுக்கு அனுமதியில்லை, மலைப் படிகள் விழாகவும் அல்லது கோயில் பேருந்துகள் மூலமாகவும் சென்று சுவாமியை வழிபடலாம் என கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது, கந்தசஷ்டி விழாவை முன்னிட்டு மருதமலையில் ஏராளமான போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.



மருதமலை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் இன்று மாலை சூரசம்ஹாரம் நிகழ்வு நடைபெறுவதையொட்டி, அதிகாலை முதல் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை புரிந்து சிறப்பு பூஜைகளில் கலந்து கொண்டனர்.

உடுமலை கச்சேரி வீதியில்

## தரைமட்ட பாலம் கட்டும் பணியை விரைந்து முடிக்க பொதுமக்கள் கோரிக்கை!

உடுமலை,அக்.28–

உடுமலை கச்சேரி வீதியில் தாலுகா அலுவலகம், சார்நிலைக் கருவூலம். மற்றும் சார்பதிவாளர் அலுவலகம், தலைமை தபால் நிலையம், கோர்ட் .அரசு மற்றும் தனியார் ஆஸ்பத்திரிகள் உள்ளிட்ட அலுவலகங்கள் உள்ளன .இதனால் சாலையில் தொடர் போக்குவரத்து இருந்து வருகிறது.

இந்த சாலையின் குறுகலான சரவணாலே லேஅவுட் செல்லும் பாதைக்கு அருகாமையில் புதிதாக தரை பாலம் கட்டுமான பணி நடைபெற்று வருகிறது .

ஆனால் இந்த பணி ஆமை வேகத்தில் நடக்கிறது இதனால் பொதுமக்கள் வாகன ஓட்டிகள் அவதிக்கு உள்ளாகி வருகிறார்கள் எனவே பாலம்கட்டும்பணியினை விரைந்து முடித்து பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



உடுமலை கச்சேரி வீதியில் தரைமட்ட பாலம் கட்டும் பணியை விரைந்து முடிக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தாளவாடியில் குரங்குகள் அட்டகாசம்!

சத்தியமங்கலம்,அக்.28–

சத்தியமங்கலம் தாளவாடியில் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதால் பொது மக்கள் தெருக்களில் நடந்து செல்லஅச்சமடைந்து வருகின்றனர். இங்குள்ள தலமலை ரோடு, பேருந்து நிலையம், கொங்கள்ளி ரோடு, ஒசூர் ரோடு, மைசூர் ரோடு மற்றும் முக்கிய வீதிகளில் குரங்குகளின் அட்டகாசம் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

கூட்டமாக வரும் குரங்குகள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைந்து உணவுப் பொருட்களை தின்றும், அழித்தும் நாசம் செய்கின்றன. மேலும் பள்ளிசெல்லும்சிறுவர்கள் மற்றும் கடைகளிலிருந்து பொருட்களை வாங்கி வரும் பெண்களை அச்சுறுத்தி, கையில் எடுத்துச் செல்லும் பொருட்களை வலுக்கட்டாயமாக பிடுங்கிச் செல்கின்றன. இதனால் பெண்கள்முதல் சிறுவர்கள் வரை அச்சமடைந்துள்ளனர். எனவே தாளவாடி பகுதியில் அதிகரித்துள்ள வனவிலங்கான குரங்குகளை கூண்டு வைத்து பிடித்து, வனப்பகுதியில் விட தாளவாடி வனச்சரக அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கேட்டுக்கொண்டு உள்ளனர்.

மொரப்பூர் அருகே

## மண்வெட்டியால் தாக்கி விவசாயி படுகொலை!

தர்மபுரி, அக்.28–

தர்மபுரி மாவட்டம் மொரப்பூர் அருகே மூங்கில்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் முருகன்(39)

விவசாய மனைவி மாதேஸ்வரி இவர்களுக்கு மூன்று மற்றும் இரண்டு வயதில் இரண்டு மகன்கள் உள்ளனர் இந்நிலையில் முருகன் மற்றும் அவரது சித்தியின் கணவரான ராஜா (60) என்பவருக்கும் இடையே வரப்பு தகராறு சம்பந்தமாக மின் விரோதம் இருந்து வந்தது கடந்த 24ஆம் தேதி காலை ராஜா தனது விவசாய நிலத்தில் வரப்புகளை சீர் செய்து தென்னகன்று நட்டுக்கொண்டிருந்தார் அப்போது அங்கு வந்த முருகன் பிரச்சனைக்கு உரிய வரப்பில் தென்னங்கன்று

நட வேண்டாம் என தெரிவித்துள்ளார் ஏற்கனவே நட்டமரத்தின் நிழல் விழுகிறது எனவே மீண்டும் மரக்கன்று நட வேண்டாம் என கூறி தடுத்துள்ளார் இதனால் அவர்களுக்கு இடையே வாக்கு வாதம் ஏற்பட்டது பின்னர் கைகலப்பாக மாறியது அப்போது அங்கு இருந்த களை எடுக்கும் மண் வெட்டியை எடுத்து ராஜா சரமாரியாக முருகனை வெட்டியுள்ளார். இதில் தலையில் பலத்த காயமடைந்த முருகன் ரத்த வெள்ளத்தில் கீழே சரிந்தார்.

அவரது அலறம் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் ஓடிவந்தனர் அதற்குள் ராஜா தப்பியோடிவிட்டார் முருகனை மீட்டு மொரப்பூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர் மேல் சிகிச்சைக்காக காரிமங்கலம் பகுதியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் பலன் இன்றி முருகன் பரிதாபமாக இறந்தார்.

இது குறித்து அவரது மனைவி மாதேஸ்வரி மொரப்பூர் போலீசில் புகார் அளித்தார் .

## புளியம்பட்டி சாலையில் சேதமான மின்கம்பத்தை மாற்ற கோரிக்கை!

புளியம்பட்டி,அக்.28–

ஈரோடு மாவட்டம் புஞ்சைபுளியம்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட மாதம்பாளையம் சாலை ஓரத்தில் உள்ள மின் கம்பத்தில் இருந்து குடியிருப்பு பகுதிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது இந்த நிலையில் நீண்ட நாட்களாக அந்த மின் கம்பம் முற்றிலும் சேதமடைந்துள்ளது.

மேலும் வீடுகளுக்கு இணைப்பு கொடுக்கப்பட்ட மின் கம்பத்தின் கீழ்ப்பகுதி முற்றிலும் சேதமடைந்து கான்கிரீட் பெயர்ந்து கம்பிகள் வெளியே தெரிகிறது, இந்த மின்கம்பம் மின் கம்பியுடன் எந்த நேரமும் முறிந்து கீழே விழுந்து விடும் அபாய நிலையில் உள்ளதால் விபத்துகளை தடுத்து எந்த ஒரு அசம்பாவிதமும் ஏற்படாமல் இருக்க மின்சார வாரிய அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு முற்றிலும்



சேதம் அடைந்து அபாய நிலையில் உள்ள மின்கம்பத்தை அப்புறப்படுத்தி விட்டு பதிலாக புதிய மின் கம்பம் அமைத்து தர வேண்டும் என அப்பகுதி பொது மக்கள் மின் வாரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்தனர்.

## ஈரோடு கூட்டுறவு வங்கியில் 60 பவுன் நகை கையாடல்!

### உதவி மேலாளர் கைது!!

ஈரோடு, அக்.28–

ஈரோடு கூட்டுறவு வங்கியில் 60 பவுன் நகை கையாடல் நகை அடமான நகை தவர்கள் அதிர்ச்சிஇதைத்தொடர்ந்து உதவி மேலாளரை கைது செய்து போலீ சார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஈரோடு முனிசிபல் காலனியில் உள்ள கூட்டுறவு நகர வங்கியில் உறுப்பினர்கள் பலர் தங்களது நகைகளை அடமானம் வைத்து கடன் பெற்று உள்ளனர்.

இந்த நகைகளின் இருப்பு தொடர்பாக வங்கியின் அதிகாரிகள் தணிக்கை செய்தனர். அப்போது60 பவுன் நகை கையாடல் செய்யப்பட்டு இருந்தது கண்டுபிடிக்கப் பட்டது. இதுதொடர்பாக வங்கியின் இயக்குனர் ஜெயந்தி ஈரோடு அரசு ஆஸ்பத்திரி போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

அதன்பேரில் நகையை கையாடல் செய்ததாக வங்கியின்உதவி மேலாளரான ஈரோடுரங்கம்பாளையம் இரணியன் வீதியை சேர்ந்த ரமேஷ்குமார் (45) என்பவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்ட நிலையில் அவர் தலைமறைவானார்

இதனால் தலைமறைவாக இருந்த ரமேஷ்குமாரை போலீசார் வலைவீசி தேடி வந்தனர். அவரை பிடிக்க ஈரோடு டவுன் போலீஸ் துணை சூப்பிரண்டு முத்து குமரன் தலைமையில்தனிப்படை அமைக்கப்பட்டது.

இந்தநிலையில் ஈரோடு மாநகர் பகுதியில் ரமேஷ் குமார் பதுங்கி இருப்பதாக தனிப்படை போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் போலீசார்அங்கு விரைந்து சென்று அவரை மடக்கி பிடித்தனர். இதையடுத்து போலீசார் அவரிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

விசாரணையில், கூடுதல் நகைகள் கையாடல் செய்யப்பட்டு இருக்கலாம் என்று தெரிகிறது. இதில் வேறு யாருக்கும் தொடர்பு உள்ளதா? மேலும் இதுபோல் மற்ற கூட்டுறவு வங்கிகளும் இது போல நடைபெற்றுள்ளதா தீவிரவிசாரணை நடைபெற்று வருகிறது.

## ஓடும் ரயிலில் பயணியிடம் நகை திருட்டு!

### சிறுவன், தம்பதி கைது!!

கோவை, அக்.28–

நெல்லை மருதகுளம் பகுதியை சேர்ந்தவர் இசக்கி (57). இவர் தனது மனைவி, மகன், மகளுடன் பொள்ளாச்சியில் இருந்து நேற்று முன்தினம் இரவு ரயிலில் கோவை வந்து கொண்டு இருந்தார். ரயில் போத்தனூர் அருகே வந்து கொண்டு இருந்த போது இசக்கியின் மனைவி தலையில் வைத்து படுத்து கொண்டு இருந்த பேக்கை சிறுவன் ஒருவர் நைசாக எடுத்து கொண்டு இருந்தார். இதை கண்டு அதிர்ச்சி அடைந்த இசக்கியின் மகன் முத்து தனது தந்தை இசக்கியிடம் தெரிவித்தார்.

அவர் அந்த சிறுவனை பிடித்து விசாரித்தார். உடனே அந்த சிறுவனுக்கு ஆதரவாக வாலிபர் ஒருவர் வந்து இசக்கியிடம் தகராறில் ஈடுபட்டார்.

இதனால் இசக்கி ரயிலின் அவசர சங்கிலியை பிடித்து இழுந்து ரயிலை நிறுத்தினார்.

இதனால் ஆத்திரம் அந்த அந்த வாலிபர் இசக்கியை தாக்கி சிறுவனுடன் ரயிலில் இருந்து இறங்கி தப்பி சென்றார். இதனால் சந்தேகம்அடைந்த இசக்கி உடமைகளை சோதனை செய்து பார்த்தார். அப்போது 6 பவுன் தங்க நகைகள் காணாமல் போயிருந்தது தெரியவந்தது.

இதற்கிடையே ரயில் சங்கிலி இழுக்கப்பட்ட பெட்டிக்கு ரயில்வே ஊழியர் சென்று விசாரித்தனர். இசக்கி நடந்தவற்றை அ வ ர் க ளி ட ம் கூறியுள்ளார். அதன் பின்னர் ரயில் 17 நிமிடங்கள் தாமதமாக புறப்பட்டது.

ரயில் போத்தனூர் வந்ததும் இசக்கி ரயில்வே பாதுகாப்பு படை போலீசார் மற்றும் ரயில்வே போலீசாரிடம் புகார் அளித்தார். புகாரின் பேரில் ரயில்வே போலீசார் வழக்கு பதிவு செய்து இசக்கியை தாக்கி நகைகளை திருடி சென்றவர்களை தேடி வந்தனர். அதில் போத்தனூர் செட்டிப்பாளையம் பாரதி நகரைசேர்ந்த உஜாத் அலி(31),அவரதுமனைவி சத்யா (25) மற்றும் அவர்களது உறவினர் 12 வயது சிறுவன் ஆகியோர் நகைகளை திருடி சென்று இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இதையடுத்து போலீசார் அவர்களை தேடி வந்தனர். அப்போது அவர்கள் செட்டிப்பாளையம் பகுதியில் பதுங்கி இருந்தது தெரிய வந்தது. போலீசார் அவர்களை மடக்கி படித்து கைது செய்தனர். அவர்களிடம் இருந்து நகைகளையும் மீட்டனர். போலீசார் தொடர்ந்து அவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவத்தால் ரயிலில் பரபரப்பு ஏற்பட்டது.

உடுமலை அருகே

## ரெயில் முன் பாய்ந்து முதியவர் தற்கொலை!

உடுமலை,அக்.28–

கோவையில் இருந்து வரும் மதுரைக்கு செல்லும் பயணிகள் ரயில் நேற்று உடுமலை கோமங்கலம் இடைப்பட்ட பகுதியில் வந்து கொண்டிருந்தது

அந்தரயில்முக்கோணம்அருகேவந்தபோதுதிடீரென 65 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் ரயில் முன்பு பாய்ந்தார். இந்தவிபத்தில்ரயில்மோதிதூக்கிவீசப்பட்ட அந்த முதியவர் சம்பவ இடத்திலேயே பலியானார். அத்துடன் ரயிலும் நிறுத்தப்பட்டது. இது குறித்து பழனி ரயில்வே போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் விரைந்து வந்து அந்த முதியவரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனை னைக்காக உடுமலை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அவர் யார் எந்த ஊரை சேர்ந்தவர் எதற்காக தற்கொலை செய்து கொண்டார். என்று விவரம் தெரியவில்லை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள்.

## கோவையில் 51 பேரிடம் ரூ.3.18 கோடி மோசடி!

### ரியல் எஸ்டேட் அதிபர் மீது புகார்!!

கோவை, அக்.28–

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வங்காரம்பேட்டையை சேர்ந்தவர் அருணாகிரி (33). சொந்தமாக தொழில் செய்து வருகிறார். இவருக்கு கோவை பாலசுந்தரம் ரோடு பாப்பநாயக்கன் பாளையத்தில் தனியார் நிதி நிறுவனம் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வரும் அசோக்குமார் என்பவர் அறிமுகமாகி உள்ளார்.

அவர் அருணாகிரியிடம் தான் கடந்த 25 வருடங்களாக ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாகவும், தான் நடத்தி வரும் நிறுவனத்தில் முதலீடு செய்தால் அதிக வட்டி தருவதாகவும்ஆசைவார்த்தை கூறியுள்ளார்.

இதை நம்பி அருணாகிரி அந்த நிறுவனத்தில் ரூ.1 கோடியே 1 லட்சத்து 20 ஆயிரத்தை முதலீடு செய்துள்ளார்.

அதன் பின்னர் அவர், அருணாகிரி முதலீடு செய்த பணத்தையும், அசோக்குமார் தருவதாக கூறிய கூடுதல் வட்டியையும் தரவில்லை. அசோக்குமாரை சந்தித்தும், போன் மூலம் தொடர்பு கொண்டும், அருணாகிரி தான் கட்டிய பணத்தை பல முறை திருப்பி கேட்டுள்ளார். ஆனால் அவர் எந்தவி த பதிலும் சொல்லாமல் அருணாகிரியை ஏமாற்றி வந்துள்ளார். மேலும், அவருடன் சேர்த்து 51 முதலீட்டாளர்கள் ரூ.3 கோடியே 18 லட்சத்து 20 ஆயிரம் முதலீடு செய்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து அருணாகிரி கோவை பொருளாதார குற்றப்பிரிவு போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் நிதி நிறுவனம் மற்றும் ரியல் எஸ்டேட் அதிபர் அசோக்குமார் மீது வழக்கு பதிவு செய்து விசாணை நடத்தி வருகின்றனர். மேலும், அசோக்குமார் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் புகார் அளிக்க போலீசார் அழைப்புவிடுத்துள்ளனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில்

# அனைத்து துணை சுகாதார நிலையங்கள், அங்கன்வாடி மையங்களில் விட்டமின்ஏ திரவம் வழங்கும் முகாம்கள்!



கிருஷ்ணகிரி, அக்.28

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து துணை சுகாதார நிலையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் விட்டமின்ஏ திரவம் வழங்கும் முகாம்கள் நடைபெற உள்ளது.

தமிழ்நாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தேசிய வைட்டமின் ஏ குறைபாடு தடுப்பு திட்டத்தின் கீழ், வைட்டமின் ஏ திரவம் வழங்கும் முகாம்கள் 27.10.2025 முதல் 01.11.2025 வரை (புதன் நீங்கலாக) நடைபெற உள்ளது.

வைட்டமின் ஏ சத்து கண்களில் விழித்திரை நிறமிகளை உற்பத்தி செய்து குறைவான வெளிச்சத்தில் பார்ப்பதற்கும், வண்ணங்களை காண்பதற்கும் குடல், சிறுநீரகம், சுவாசப் பாதைகள் தோல் மற்றும் கண்களில் மேலடுக்கு திசுக்களை பராமரிப்பதற்கும் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குவதற்கும் மூச்சுக்குழாயில் ஏற்படும் எபிதீலியல் புற்று நோயை தடுப்பதற்கும் பயன்படுகிறது.

ஏ வைட்டமின் ஏ சத்து பச்சைக்கீரைகள், காய்கறிகள், கேரட், முட்டைக்கோஸ், பச்சைபட்டாணி பப்பாளி, மாம்பழம், திராட்சை போன்ற பழங்களிலும், மீன், முட்டை, பால், பாலாடை கட்டிகள் போன்ற உணவு பொருட்களில் உள்ளது. வைட்டமின் குறைபாட்டினால் குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு, தீவிர சுவாச தொற்றுநோய் மற்றும் 3 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அடிக்கடி நோய் வாய்ப்படுதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

வைட்டமின் ஏ சத்து குறைபாடு ஏற்படுவதற்கு காரணம் குறைந்த அளவு வைட்டமின் ஏ சத்துள்ள பொருட்களை உட்கொள்வது. சுவாசப்உபாதை தொற்றுகள், வயிற்றுப் போக்கு மற்றும் தட்டம்மை நோய்களால் வைட்டமின் ஏ உட்கிரகிப்பதில் தாமதம் ஏற்படுகிறது. மேலும், உடல்வளர்ச்சிக்கு வைட்டமின் ஏ சத்து அதிகமாக தேவைப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, உலக அளவில் ஒவ்வொரு ஆண்டும் 2,50,000 முதல் 5.00.000 குழந்தைகள் பார்வை இழப்பு பாதிப்புக்கு உள்ளாகுவதாக தெரிவித்துள்ளது. வைட்டமின் ஏ குறைபாடு உள்ளவர்கள் இந்தியாவில் 17.54 சதவீதம், தமிழ்நாட்டில் 7 சதவீதம் பேர்கள் உள்ளனர். இதனை தடுக்கும் நோக்கில் வைட்டமின் ஏ திரவம் வழங்கும் முகாம்கள், நடத்தப்பட உள்ளது. விட்டமின்ஏதிரவம்வழங்கும் முகாம் "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 27.10.2025 முதல் 01.11.2025 வரை நடைபெற்ற உள்ளது. இத் திட்டத்தின் கீழ், நமது மாவட்டத்தில் 6 மாதம் முதல் 5 வயது வரை உள்ள சுமார் 1.4 லட்சம் குழந்தைகளுக்கு விட்டமின்ஏ திரவம் வழங்கப்பட உள்ளது. இத்திரவம் அனைத்து துணை சுகாதார நிலையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங் களில் 6 முதல் 11 மாதம் வரை உள்ள குழந்தைகளுக்கு 1 மில்லி அளவும் 12 மாதம் முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு 2 மில்லி அளவும் வழங்கப்பட உள்ளது.

பொதுமக்கள் தாங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகில் உள்ள வைட்டமின் ஏ திரவம் வழங்கும் முகாம்களை அணுகி தங்கள் குழந்தைகளுக்கு வைட்டமின் ஏ திரவம் வழங்கி உடல்நலனை பேணி பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்த லைவர் .ச.தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.




# ஆலங்காயம் மத்திய ஒன்றியத்தில் ஆலோசனைக்கூட்டம்!

வாணியம்பாடி அக். 28

திருவண்ணாமலையில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தின்படி, மாவட்ட கழக செயலாளர், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி வழிகாட்டுதலின்படி, வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி, ஆலங்காயம், மத்திய ஒன்றியத்திற்குட்பட்ட பணிக்குழு9க்கு உட்பட்ட 23 பூத்களில், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தே.பிரபாகரன் ஏற்பாட்டில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பற்றியும், கழக ஆக்கப்பணிகள் குறித்தும்,2026சட்டமன்ற தேர்தல் குறித்தும் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில்ஆலங்காயம் மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர் அன்பு, வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வையாளர் நாருஸ்லா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். இதில் வாக்குச்சாவடிமுகவர்கள், தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு ஒருங்கிணைப்பாளர்கள், நிர்வாகிகள் உட்பட பலரும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## மிட்டஹள்ளி கிராமத்தில்

# காங்கிரஸ் தியாகி லோகநாதன் முனியம்மாள் தேங்காய் கொள்முதல் நிலையத்தினை டாக்டர் சமரசம் திறந்து வைத்தார்!



கிருஷ்ணகிரி, அக்.28

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிபட்டினம் அருகே உள்ள மிட்ட ஹள்ளி கிராமத்தில் காங்கிரஸ்கட்சியின்தியாகியும் தொழில் அதிபருமான பி.லோகநாதன் முனியம்மாள் தேங்காய் கொள்முதல் மற்றும் கொப்பரை கொள்முதல்நிலையத்தின் திறப்பு விழா நடைபெற்றது,

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும் காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினருமாரும், முன்னாள் மிட்ட ஹள்ளி ஊராட்சி மன்றத்தலைவருமான எல்.சுப்பிரமணியன்சாந்தி ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக முன்னாள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் மருத்துவருமான சமரசம் மற்றும் தொழில் அதிபரும் தேங்காய் வியபாரியுமான ஜி.சுந்தரம் ஆகியோர் கலந்துக் கொண்டு தேங்காய் விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக துவங்கப்பட்டுள்ள தேங்காய் கொள்முதல் நிலையத்தினை குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தனர்.

மேலும் இந்த விழாவின் போது கவுன்சிலர் ராதாகிருஷ்ணன், தொழிலாளர் அணி மாவட்ட தலைவர் ராமச்சந்திரன், ஜெயவேல், ஊர் கவுண்டர் ராமமூர்த்தி, குணசேகரன், சிவானந்தம், காவேரி, வேடி, பள்ளி தாளாளர் கிருஷ்ணன், ஜே.சி ஐ செந்தில், வெங்கட்ராஜ், வரதராஜ், ஊர் கவுண்டர் கணேசன், ஜெயவேல், தேங்காய்வியபாரி புதூர் வேடி, மேஸ்திரிகள் பூங்காவனம், துரை, ராஜேந்திரன், மாரிமுத்து, பூக்கடை தண்டபாணி பெயின்டர் குமரேசன், ஹோட்டல் அதிபர் கோவிந்தசாமி, ராமன், முன்னாள் ஜேசிஸ் மண்டல தலைவர் சுரேஷ், அருள்மணி உள்ளிட்ட விவசாயிகளும் கிராம மக்களும் பெரும் திரளாக இந்த விழாவில் கலந்துக் கொண்டனர்.




# வாணியம்பாடி ஆதர்ஷ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் தாத்தா, பாட்டிகளுக்கான விளையாட்டுப் போட்டி விழா!

வாணியம்பாடி, அக்.28

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி ஆதர்ஷ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் தாத்தா, பாட்டிகளுக்கானவிளையாட்டுப் போட்டிகள் பள்ளி மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்குபள்ளிதாளாளர்டாக்டர்செந்தில்குமார் தலைமை வகித்தார்.

பள்ளித் தாளாளரின் செயலாளர் எஸ். கே.ஷபானா பேகம், நிர்வாக முதல்வர் சத்தியகலா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் பந்து எறிதல், லக்கி கார்னர், வளையம் ரேஸ் மற்றும் வளையல் அடுக்குதல் உள்ளிட்ட பல போட்டிகள் நடத்தப்பட்டன.

அனைத்து போட்டிகளிலும் மாணவர்களின் தாத்தா பாட்டிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பள்ளி தாளாளர் செந்தில்குமார் பரிசுகளை வழங்கி பாராட்டினார். நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகள் முழுவதையும், ஒருங்கிணைப்பாளர் ஹாஜிரா இராம் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் ராம்குமார், மஹாதேவி ஆகியோர் செய்திருந்தனர்.

## காங்கேயம் அருகே

# 10.5 ஏக்கரில் 40 வகையான மரக்கன்றுகள் நடும் விழா!

காங்கேயம், அக். 28–

திருப்பூர் மாவட்டம் காங்கேயம் சென்னிமலை சாலையில் உள்ள நால் ரோடு அருகே சிவன்மலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான 10.5 ஏக்கர் நிலப்பரப்பில் மரம் நடும் விழா நடைபெற்றது. திருப்பூர் மாவட்ட ஆட்சியர் மனிஷ் நாரணவரே தலைமையில் விழா நடைபெற்றது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் க்ரிஷ் அசோக், மாவட்ட வன அலுவலரும் துணை இயக்குனருமான ராஜேஷ் போஜ், இந்து சமய அறநிலைத்துறை உதவி ஆணையர் நந்தகுமார், மற்றும் காங்கேயம் காவல் உதவி கண்காணிப்பாளர் அர்பிதா ராஜ்புட் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் விழா ஏற்பாடுகளை காங்கேயம் துளிகள் அமைப்பினரும் வனத்துக்குள் திருப்பூர் அமைப்பினரும் செய்திருந்தனர். இதில் காங்கேயம், திருப்பூர், தாராபுரம், வெள்ள கோவில் பகுதிகளை சேர்ந்த 25க்கும் மேற்பட்ட தன்னார்வ அமைப்பினர் கலந்து கொண்டனர். இந்த 10.5 ஏக்கரில் 40 வகையான அழிவின் விளிம்பில் உள்ள அரிய வகையான 1500 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டது. இதில் இச்சி, இலுப்பை, கொ.புளி , நாவல், அரசு, ஆயன், மருதம், புங்கன், நா.வாகை, தான்றிக்காய், கொஞ்சி, வால்சுரா, சொக்களை, பச்சை நழுவை, காட்டு எலுமிச்சை, காட்டு நார்த்தை, குகமதி, காகை பாலை, நெட்டி, ப்ராய், கருங்காலி, கருமருது, ஆத்தி ஆகிய மரக்கன்றுகள் அடங்கும்.

இந்த பணிகளை செய்ய 500–க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தனர்.

## புதுக்கோட்டை அருகே

# கும்பல் தாக்கியதில், தாயும் மகனும் படுகாயம்!

## புகார் மனுவிற்கு நடவடிக்கை எடுக்காத போலீசை கண்டித்து மறியல்!!

புதுக்கோட்டை அக்.28

புதுக்கோட்டைமாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள கீரமங்கலம் அரண்மனை கொல்லையை சேர்ந்த சுப்பிரமணியன் மனைவி கலைமணி (75) இவரது மகன் அன்பழகன் (47) இவர்களும் இவரது சித்தப் பா கூட்டு சொத்தில் மாடு கட்டுவதில் ஏற்பட்ட பிரச்சனையை மூலக்காரணமாக கூறப்படுகிறது.



இதற்காக சம்பந்தமில்லாத இதே பகுதியை சேர்ந்த 5 க்கும் மேற்பட்ட கும்பல் வீடு புகுந்து நேற்று முன்தின இரவு அரிவாள் மற்றும் கைகளால் தாக் கி இருவரையும் கொலைவெறி தாக்குதலால் படு காயம் அடைந்து மயக்க நிலையில் கிடந்துள்ளனர்.

இதையடுத்து அப்பகுதியினர் 108 ஆம்புலன்ஸ் மூ லமாக இருவரையும் மீட்டு அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தனர்.

இ து கு றி த் து கீரமங்கலம் நகர மகளிர் காங்கிரஸ்துணைத்தலைவராக உள்ள அன்பழகன் மனைவி சுமதி கீரமங்கலம் போலீஸ் நிலையத்தில் (பேர்களோடு) சேர்த்து இரவு நேரத்தில் கும்பல் வீடு புகு ந்து உணவு பானைகள், மோட்டார் சைக்கிள் மற்றும் பொருட்களை அடித்து உடைத்து ரகளையில் ஈடுபட் ட வீடியோ ஆதாரங்களுடன் கீரமங்கலம் போலீஸ் நிலையத்தில் நேற்று முன்தின இரவு புகார் மனு கொடுத்ததாக மறியல் போராட்டத்தில் கோஷங் களை எழுப்பி சுமதி தெரிவித்தார்.

புகாரின் பேரில் நேற்று முன்தின இரவு போலீசார் அங்கு சென்று விசாரணை நடத்தியும், அதி காலை வரை அப்பகுதியில் பாதுகாப்பில் இருந்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

இதையடுத்து புகார் மனுவை போலீசார் பெற்றுக் கொண்டு கைது நடவடிக்கைஎடுக்கவில்லை என கூறப்படுகிறது. நேற்று காலை கும்பலில் ஒருவர்இன்னும்கொலை செய்வேன் எனக்கூறி திட்டிய தாக கூறப்படுகிறது.

மீண்டும் நேற்று காலையில் கும்பலில் ஒருவர் ரகளையில் (அதாவது வெட்டுவேன், குத்துவேன்), கடைகளை உடைப்பேன் என்று திட்டியதாக கூறி கொலைவெறி தாக்குதலில் ஈடுபட முயலும் கும்ப லை கைது செய்யாமல் வேடிக்கை பார்க்கும் கீரம ங்கலம் போலீசை கண்டித்தும்,

கைது செய்ய வலியுறுத்தியும், பட்டுக்கோட்டை அறந்தாங்கி கீரமங்கலம் பஸ் ஸ்டாண்ட் அருகில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் சார்பில் உறவினர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் கைது செய்யாத போலீஸ் அராஜகத்தை கண்டித்தும் சில கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பியும் மதியலில் ஈடுபட்டனர்.

அப்போது சம்பவ இடத்திற்கு வந்த கீரமங்கலம் போலீஸ் இன்ஸ்பெக்டர் பாரதி மற்றும் போலீசார் மதியலில் ஈடுபட்டவர்களிடம் சமரசம் செய்து பேசி னர்.

அப்போது உடனடியாக கைது செய்வதாக போலீசா ர் உறுதி அளித்ததை தொடர்ந்து மறியலை கைவி ட்டு கலைந்து சென்றனர். இந்த மறியலால் கீரமங்கலம் பஸ் ஸ்டாண்டில் பரபரப்பு ஏற்பட்டது. மேலும் அரை மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## துணை ஜனாதிபதி கோவை வருகை:

# பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆலோசனைக் கூட்டம்!

## கலெக்டர் பங்கேற்பு!!

கோவை, அக்,28

துணை ஜனாதிபதி சி,பி ராதாகிருஷ்ணன் இரண்டு நாள் சுற்றுப்பயணமாக நாளை மறுநாள் ( செவ்வாய்க்கிழமை) தமிழகம் வருகிறார், அவர்காலை10 மணியளவில் டெல்லியில் இருந்து விமானம் மூலம் கோவை விமான நிலையம் வருகிறார்,

கோவையில பாஜனதா சார்பில் நடைபெறும் பாராட்டு விழாவில் கலந்து கொள்கிறார், பின்னர் மறுநாள் ( 29ந் தேதி ) திருப்பூரில்தனதுதாயாரை சந்தித்து ஆசி பெற உள்ளார். துணை ஜனாதிபதி கோவை வருகையையொட்டி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது, இதற்காக ஒத்திகை நடத்தப்பட உள்ளது, கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் அனைத்து துறை அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

கூட்டத்துக்கு மாவட்ட கலெக்டர் பவன்குமார் தலைமை தாங்கினார், கூட்டத்தில் கோவைக்கு வருகை தரும் துணை ஜனாதிபதி சி,பி, ராதாகிருஷ்ணனுக்கு எவ்வாறு பாதுகாப்பு அளிப்பது என்பது குறித்து விவாதிக்க ப்பட்டது,

இதில் மாநகராட்சிஆணையாளர் சிவகுருபிரபாகரன் மாவட்ட வருவாய் அதிகாரி முனைவர் ஷர்மிளா உள்பட அதிகாரிகள் பங்கேற்றனர்.

## கடையநல்லூர் நகராட்சியில்

# குடிநீர் பிரதான குழாய் பராமரிப்பு பணி; 4 நாட்கள் குடிநீர் வினியோகம் இருக்காது!

## ஆணையர் லட்சுமி அறிவிப்பு!!

தென்காசி, அக்.28

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகராட்சியில் அக்டோபர் 28 (நாளை) முதல் நான்கு நாட்களுக்கு குடிநீர் விநியோகம் இருக்காது. என ஆணையர் திருமதிலட்சுமி தெரிவித்துள்ளார் அத்தியாவசிய மற்றும் அவசிய பணிகளுக்கு மாற்று ஏற்பாடு நகர்மன்ற தலைவர் முனைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். இதுகுறித்து நகராட்சி ஆணையர் திருமதி லட்சுமி விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது...கடையநல்லூர் நகராட்சியின் தலைமை பணியிடத்தில் இருந்து மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிகளுக்கு நீரேற்றும் பிரதான குழாயில் உள்ள பழுதுகளை சரிசெய்ய வேண்டி



இருப்பதால் 28.10.2025 (செவ்வாய் கிழமை) முதல் 31.10.2025 வெள்ளிக் கிழமை வரை குடிநீர் விநியோகம் இருக்காது.

எனவே,குடிநீரை சிக்கனமாக பயன்படுத்த பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.மேலும் மாற்று வழிகளில் நான்கு நாட்கள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கும் பணிகள் நடைபெறும் நிலையில் பொதுமக்கள் நலன் பாதிக்காத வகையில் மாற்று வழிகளில் தேவைப்படும் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் என நகர் மன்ற தலைவர் முனைவர் ஹபீபுர்ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போது வட கிழக்கு பருவ மழை தொடர்ந்து பெய்து வருவதால் குடிநீரை காய்ச்சி பருக வேண்டும் சிறு குழந்தைகள் மற்றும் வயது முதிர்ந்தோர் தொடர்ந்து காய்ச்சல் காணப்பட்டால் அரசு மருத்துவமனை மற்றும் நகர்ப்புற சுகாதார மேம்பாட்டு நிலையங்களை அணுகி சிகிச்சை பெற வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# கூடலூர் நகராட்சி பகுதியில் வார்டு சபை கூட்டம்!

பெ.நா.பாளையம், அக்.28–

கோவை கூடலூர் நகராட்சி உட்பட்ட 6 வது வார்டில், வார்டு சபை கூட்டம் நகராட்சி தலைவர் அ.அறிவரசு தலைமையில்நடந்தது. கூட்டத்திற்கு ஆனையாளர் பூவேந்திரன் முன்னிலை வகித்தார். இதில்,

தமிழக அரசின் சமீபத்திய சுற்றறி க்கையை யொட்டி நகராட்சி பகுதிகளில் உள்ள ஜாதிப் பெயர்களை நீக்குவது தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டன. இதில் நகராட்சி ரோடு சாக்கடை மறு சீரமைப்புகள், பொது சுகாதாரம், குடிநீர், தெரு விளக்கு அமைப்பது உட்பட பல கோரிக்கை விடுத்தனர். மனுக்களை பெற்ற தலைவர் உடனடியாக ஆய்வு செய்து. நடவடிக்கைகள் எடுப்பதாக கூறினார்.

இக் கூட்டத்தில் மன்ற உறுப்பினர் கள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.



கடலூர் மாவட்டம் நல்லாத்தூர் பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதி மேல குப்பம் பகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மற்றும் கூரை வீடுகள் இருக்கும் மத்தியில் உள்ள வீடு இடிந்த காட்சியை சட்டமன்ற உறுப்பினர் பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட மக்களை ஒன்று சேர்த்து அவங்களுக்கு அரிசி மற்றும் மளிகை பொருட்கள் தேவையான பணம் நிதி உதவி செய்திருக்கிறார் சட்டமன்ற உறுப்பினர் கலைஞர் வீடு கட்டும் திட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு உடனடியாக வழங்கப்படும் என்று கூறி இருக்கிறார் ஒன்றிய செயலாளர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் உறுப்பினர்கள் வருவாய் துறை சம்பந்தப்பட்ட (விஏஓ )அவர்கள் பாதிக்கப்பட்ட இடத்தில் இருந்தார்கள் மேற்படி நல்லாத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் சரவணன், கடலூர் மாவட்ட விசிக ஒன்றிய செயலாளர் ஜானகிராமன் , கோ. ஐயப்பன் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கூட இருந்தார்கள்.



கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் யூனியன் பையூரில் உள்ள பஸ் நிலையத்தில் அனைத்து பேருந்துகளும் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என அசோக்குமார் எம்.எல்.ஏ.விடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

# காட்பாடி பகுதியில் மழைவெள்ளத்தால் பாதித்த பகுதிகளை நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் நேரில் ஆய்வு!



வேலூர்,அக்.28

வேலூர்மாவட்டம்,காட்பாடியில் கழிஞ்சூர் ஏரி நிரம்பி உபரி நீர் வெளியேறும் பகுதிகளையும் கிளித்தான்பட்டறை இரட்டை கண் வாராதி பகுதி வி.ஜி.ராவ் நகர் பகுதி,போன்ற இடங்களில் தமிழக நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் ஆய்வு செய்தார் அவருடன் மாவட்ட ஆட்சியர் சுப்பு லெட்சுமி ,மேயர் சுஜாதா துணை மேயர் சுனில் ஒன்றாவது மண்டல குழு தலைவர் புஷ்பலதா மாமன்ற உறுப்பினர் டீட்டா சரவணன் உள்ளிட்டோரும் அரசு அதிகாரிகளும் உடன் இருந்தனர்

ஆய்வுக்கு பின்னர் அமைச்சர் துரை முருகன் செய்தியாளர்களிடம் கூறுகையில் ஒரு மாதகாலமாக அரசு முழுக்க முழுக்க இந்த பருவ மழைகள் எல்லாம் மக்களை காப்பாற்ற நடவடிக்கை எடுத்து கொண்டிருக்கிறோம் அமைச்சர் மற்றும் திமுக பொறுப்பில் இருப்பவர்களும் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர் ஆனால் வேகமாக வரும் தண்ணீரை கட்டுபடுத்தும் வழிமுறைகளை பேசி வருகிறோம் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்குவதை தடுக்க என்ன நடவடிக்கை என செய்தியாளர்கள் கேட்டதற்கு உபரி நீரை இங்கிருந்து ஏரியிலிருந்து வெளியே செல்லும் உபரி நீர் பாண்டியன் மடகு திட்டத்தை ரூ.25 கோடி ஒதுக்கியுள்ளோம் பணியை துவங்கவுள்ளனர் அ ப் ப ணி க ள் நிறைவடைந்தால் மழைநீர் குடியிருப்பு பகுதிகளுக்குள் செல்லும் பாதிப்பு இருக்காது மத்திய அரசு வெள்ள நிவாரண நிதியை கொடுப்பதில்லை நீர் நிலை ஆக்கிரமிப்புகளை அகற்ற ஆட்சியரிடம் சொல்கிறேன் முதல்வர் சினிமா விமர்சகராக மாறிவிட்டதாகவும் விவசாயிகளை பற்றி கவலையில்லை என எடப்பாடி பழனிசாமி கூறியதுகுறித்தசெய்தியாளர்களின்கேள்விக்கு எதிர்க்கட்சி என்றால் அப்படி தான் சொல்லுவார்கள் எங்களை வாழ்த்தவா வாழ்த்துவார்கள் நீர் நிலை ஆக்கிரமிப்பார்களுக்கு தெரியும் என்ன நிலைமை என்று மேலும் அதிகாரிகளுக்கு பருவ மழைக்கு முன்னரே மக்களுக்காக வெள்ளம் பாதிக்காமல் இருக்க பணி செய்ய உத்தரவிட்டுள்ளேன் என கூறினார் .

## ஓய்வு பெற்ற அரசு தலைமை பொறியாளரிடம்

# முறையற்ற பணப்பரிவர்த்தனை; 29.8 மோசடி செய்த மூவர் கைது!







கோவை,அக்.28

ஓய்வு பெற்ற அரசு தலைமை பொறியாளரிடம் முறையற்ற பணப்பரிவர்த்தனை நடந்திருப்பதாக கூறி 29.8 மோசடி செய்த மூவர் கைது செய்யப்பட்டனர்...

தமிழகஅரசின்சென்னையில்தலைமை பொறியாளராக பணியாற்றி ஓய்வு பெற்றவர் அதிகாரி கோவையில் வசித்து வருகிறார். கடந்த ஏப்ரல் மாதம் தொலைபேசியில் தொடர்பு கொண்ட மர்ம நபர்கள், உங்கள் வங்கிக் கணக்கில் முறையற்ற பரிவர்த்தனை நடந்து உள்ளதாக கூறி உள்ளனர். அப்போது அவர் என் மீது தவறில்லை எனக் கூறவே அந்த மர்ம நபர்கள் உங்கள் இந்தியன் வங்கிக் கணக்கில் உள்ள பணத்தை ஹெச்.டி.எஃப்.சி என்ற வங்கிக் கணக்கிற்கு அனுப்புங்கள் சரியாக இருந்தால் திருப்பி அனுப்புகிறோம் என்று கூறி உள்ளனர்.

அதனை நம்பிய அவர் வங்கியில் இருந்த 29,88.000 லட்சம் ரூபாயை அவர்கள் கூறிய வங்கிக் கணக்கிற்கு அனுப்பி உள்ளார். பின்னர் அந்த பணம் மீண்டும் அவருக்கு வராததால், அவருக்கு வந்த அலைபேசி எண்ணுக்கு மீண்டும் தொடர்பு கொண்ட போது ஸ்விட்ச் ஆப் செய்யப்பட்டு உள்ளது. பிறகு தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அவர் கோவை மாநகர சைபர் கிரைம் காவல் துறையினரிடம் புகார் அளித்தார். புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்த கோவை மாநகர சைபர் கிரைம் காவல் துறையினர் விசாரணை நடத்தினர். விசாரணையில் அந்தப் பணத்தில் இருந்து ஆறு லட்ச ரூபாயை அந்த மோசடி கும்பல் எடுத்து உள்ளது விசாரணையில் தெரிய வந்தது. இதனை அடுத்து ஆறு லட்ச ரூபாய் பணத்தை எடுத்த நபரிடம் நடத்திய விசாரணையில், அவர் கேரளா மாநிலம் மலப்புரத்தைச் சேர்ந்த நபீல் என்பதும், அவருடன் ஹரிஷ் (எ)குட்டாஸ் மற்றும் முகமத் ராமீஸ் இந்த மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது. தொடர்ந்து அவர்களை கைது செய்த காவல் துறையினர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி கோவை மத்திய சிறையில் அடைத்தனர்.

# கோவையில் குட்டியுடன் உலாவரும் காட்டு யானை!



கோவை,அக்.28

கோவை மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி உள்ள பகுதிகளில் தொடர்ந்து காட்டு யானைகள் உணவு தேடி உலா வந்து கொண்டு உள்ளது.

இந்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு மனிதர்களை அச்சுறுத்தி மூன்று பேரை கொன்ற ரோலக்ஸ் என்ற ஒற்றைக் காட்டி யானையை வனத் துறையினர் மயக்க ஊசி செலுத்தி பொள்ளாச்சி டாப்ஸ்லிப்பில் உள்ள யானைகள் முகாமிற்கு கொண்டு சென்றனர்.

இதைத்தொடர்ந்து இன்று காலை தொண்டாமுத்தூர் பகுதிகளில் ஒற்றைக் கொம்பன் ஆற்றில் இறங்கிச் சென்ற செல்போன் வீடியோ வைரலானது.

அதேபோன்று தடாகம் சுற்று வட்டாரப் பகுதியில் தோட்டத்து வீட்டில் வைத்து இருந்த அரிசி மாவை தின்று பயிரிடப்பட்ட வாழைத், தென்னை மரங்களை சேதப்படுத்தி சென்றது வேட்டையன் என்ற ஒற்றை காட்டு யானையின் சி.சி.டி.வி காட்சிகள் வெளியாகி அப்பகுதி மக்கள் இடையே அச்சத்தை ஏற்படுத்தியது.

இந்நிலையில் இன்று மாலைதுடியலூர், அடுத்த பன்னிமடை அருகே உள்ள பொண்ணுது அம்மன் கோவில் அடிவாரத்தில் குட்டியுடன் தாய் யானை உலா வந்து கொண்டு உள்ள செல்போன் வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் பதிவு செய்து, பொன்னுத்தம்மன் கோவிலுக்கு செல்லும் பக்தர்கள் பாதுகாப்புடன் எச்சரிக்கையாக செல்லுமாறு சமூக வலைதளங்களில் பதிவு செய்து வருகின்றனர்.

மேலும் வனத்துறையினர் அந்த யானையை வனப்பகுதிக்குள் விரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

# விஜய்க்கு பயிற்சியாளர்கள் அ.தி.மு.க.வினர்தான்!

## ராஜேந்திர பாலாஜி பேச்சு!!



சிவகாசி, அக்.28

விஜய்க்கு பயிற்சியாளர்கள் அ.தி.மு.க.வினர்தான் என்று முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி கூறினார். சிவகாசியில் இது தொடர்பாக அவர் கூறியதாவது:–

டெல்டா மாவட்டங்கள் மட்டுமின்றி, தமிழகம் முழுவதும் கன மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். எதிர்க்கட்சித்தலைவர் சுட்டிக் காட்டும் பிரச்சினைகளை சரி செய்யாமல் விளக்கம் கொடுத்துக்கொண்டே இருந்தால், இந்த அரசுக்கு மக்கள் முடிவு கட்டுவர். அதிமுக, பாஜக கூட்டணி பலமாக இருக்கிறது. திமுக ஆட்சி மீது மக்களுக்கு வெறுப்பு அதிகரித்துள்ளது. அந்த வெறுப்பு அதிமுகவுக்கு வாக்குகளாக மாறும். கரூரில் 41 பேர் உயிரிழந்த சம்பவத்தில் உள்ள சதிகள் குறித்து சிபிஐ விசாரணைக்கு பின் தெரியவரும். உயிரிழந்த குடும்பங்களிடம் மனம் விட்டு பேச வேண்டும் என்பதற்காகத்தான், விஜய் அவர்களை நேரில் வரவழைத்துள்ளார்.

விஜய்க்கு உள்ள 'மாஸ்' வாக்காக மாற வேண்டும் என்றால் பயிற்சியாளர்கள் தேவை. அந்தப் பயிற்சியாளர்கள்தான் அதிமுகவினர். விஜய் அதிமுக கூட்டணிக்கு வருவது அவரது எதிர்காலத்துக்கும், அவரது பாதுகாப்புக்கும் நல்லது. பாஜக– அதிமுக விஜய் கூட்டணி சேர வேண்டும் என மக்களும் வி ரு ம் பு கி றா ர் க ள் . விஜய்யை கூட்டணிக்கு அழைக்கவில்லை, வந்தால் வரவேற்போம். இவ்வாறு அவர் கூறினார்.

# கவிஞர் சினேகன் தந்தை காலமானார்!

## திரையுலகினர் இரங்கல்!!



சென்னை, அக். 28

திரைப்பட பாடலாசிரியரும், மக்கள் நீதிமய்யக்கட்சியின் இளைஞர் அணி மாநில செயலாளருமான கவிஞர் சினேகனின் தந்தை சிவசங்கு இன்று அதிகாலை 4.30 மணியளவில் காலமானார். அவருக்கு வயது 102. அவரது இறுதிச்சடங்கு நாளை காலை 11 மணிக்கு நடக்க உள்ளது சிவசங்கு மறைவுக்கு மக்கள் நீதி மய்யக்கட்சியினர் மற்றும் திரையுலகினர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். திரைப்பட பாடலாசிரியரும், மக்கள் நீதிமய்யக்க ட்சியின் இளைஞர் அணி மாநில செயலாளருமான கவிஞர் சினேகனின் தந்தை சிவசங்கு இன்று அதிகாலை 4.30 மணியளவில் காலமானார். அவருக்கு வயது 102. அவரது இறுதிச்சடங்கு தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கவிஞர் சினேகனின் சொந்த கிராமமான புதுக்கரியப்பட்டியில் நாளை காலை 11 மணிக்கு நடக்க உள்ளது. சிவசங்கு மறைவுக்கு மக்கள் நீதி மய்யக்கட்சியினர் மற்றும் திரையுலகினர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

## சட்டப்பேரவை தேர்தல்:

# மதுரையில் வி.சி.க. போட்டியா?

## திருமாவளவன் சூசக பதில்!

மதுரை, அக்.28

சட்டப்பேரவை தேர்தலில் மதுரையில் வி.சி.க. போட்டியிடுவது பற்றி தொகுதி பங்கீட்டின் போது முடிவு எடுக்கப்படும் என்று அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் கூறினார். சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் திருமண விழா ஒன்றில் பங்கேற்க சென்னையில் இருந்து விமான மூலம் விசிக தலைவர் தொல். திருமாவளவன் மதுரை வந்தார். மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த நடவடிக்கை தமிழகத்திலும் மேற்கொள்ளப்படுவதற்கு அறிவிப்பு வெளியானது. இதற்கு அனைத்துக் கட்சிகளும் கூ டி விவாதிக்கவேண்டும். தமிழ்நாடு, மேற்கு வங்கம், கேரளா ஆகிய 3 மாநில சட்டமன்ற தேர்தலையொட்டி சிறப்பு வாக்காளர்கள் பட்டியல் திருத்த நடவடிக்கை அதிர்ச்சி அளிக்கிறது. இதை நடைமுறைபடுத்தகூடாது. பீகாரில் வாக்கு திருட்டு நடந்ததை போன்று தமிழகத்திலும் நடக்கும். இதற்காக திமுக, அதிமுக உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் ஒன்று திரளவேண்டும். பல்கலைக்கழக சிறப்பு மசோதாவை திரும்ப பெறவேண்டும் என விசிக சார்பிலும் தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளோம். இது குறித்து உயர் கல்விதுறை அமைச்சர் கோவி. செழியன் மறுசீராய்வு செய்யப்படும் என அறிவித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. பாஜகவில் பொறுப்பில் இருந்து அண்ணாமலை வெளியேற்றப்பட்ட நிலையில், அவர் அரசியல் செய்ய களமின்றி போனதால் விரக்தியில் உள்ளார். எதை தின்றால் பித்தம் தெளியும் என்பது போல விசிகவுக்கு எதிராக அவதூறாக பேசுகிறார். எப்படி பிரசாரம் செய்தாலும் பாஜக தலைமைக்கு இனிமேல் அவர் மீது நம்பிக்கை இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# சித்தூர்– கடலூர் தேசிய நெடுஞ்சாலையில் தண்ணீர் தேங்கியதால் போக்குவரத்து பாதிப்பு

வேலூர்,அக்.28

வேலூர்மாவட்டம்,காட்பாடியில் கழிஞ்சூர் ஏரி நிரம்பி உபரி நீர் காட்பாடி குடியிருப்பு பகுதிகளில் புகுந்தது இதில் மூன்று தெருக்களில் தண்ணீர் வீடுகளில் புகுந்ததுடன் கடைகளிலும் தண்ணீர் புகுந்ததால் வியாபாரிகளும் பாதிப்படைந்துள்ளனர் மேலும் தண்ணீர் கடலூர் சித்தூர் தேசிய நெடுஞ்சாலை பாதிக்கும் மேல் தண்ணீர் உள்ளது இதனால் வேலூரில் இருந்து காட்பாடி செல்லும் வாகனங்கள் ஊர்ந்து சென்றன இதனால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது தற்போது ஜேசிபி இயந்திரங்களை கொண்டு நீரை வடியவைக்கும் பணிகள் ஈடுபட்டனர் நேற்று இரவு பெய்த மழையால் இந்த பாதிப்பு என்பது குறிப்பிடத்தக்கது



தர்மபுரி நகர பகுதியில் ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் கல்லூரி மாணவியர்கள் தங்கி பயிலும் வகையில் சமூக நீதி கல்லூரி மாணவர் புதிய விடுதி கட்டிடம் கட்டப்பட்டு வருவதை அமைச்சர் மதிவேந்தன், கலெக்டர் சதீஷ் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அருகில் மாவ்டட காவல் கண்காணிப்பாளர் மகேஸ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தேன்மொழி மற்றும் பலர் உள்ளனர்.

# ஆம்பூர் துத்திப்பட்டில் தோல் கழிவு சேமிப்பு கிடங்கில் திடீர் தீ விபத்து!

## ரூ. 4 லட்சம் மதிப்பிலான தோல் கழிவுகள் எரிந்து சாம்பல்!!



ஆம்பூர். அக்.28

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் அடுத்த பாங்கி ஷாப் பகுதியைச் சேர்ந்தவர் அக்பர் பாஷா. இவர் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக துத்திப்பட்டு ஊராட்சி அம்பேத்கார் நகர் முதல் தெருவில் தோல் கழிவுகள் சேமிப்பு கிடங்கு நடத்தி வருகிறார். தோல் கழிவுகள் சேமிப்பு கிடங்கு விடுமுறை காரணமாக மூடிய நிலையில் இருந்தது. இந்த நிலையில் கிடங்கில் மாலை 6.30 மணி அளவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. உடனடியாக அக்கம் பக்கத்தினர் உமராபாத் போலீஸார் மற்றும் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். தகவலின் பேரில் ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி ஆகிய பகுதிகளில் இருந்து தீயனைப்பு துறையினர் விரைந்து சென்று சுமார் 1 மணி நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்து காரணமாக கிடங்கில் இருந்த சுமார் 4 லட்சம் ரூபாய் மதிப்பிலான தோல் கழிவுகள் எரிந்து சாம்பல் ஆனது. தீ விபத்து காரணமாக அப்பகுதி புகை மண்டலமாக காணப்பட்டது.

சம்பவம் குறித்து உமராபாத் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



கோவை காமராஜர் சாலை, லட்சுமிபுரம், 6–வது வீதி பகுதியில் சாலையோரங்களில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, குப்பைகளை உடனடியாக அகற்றிடவும், பொது இடங்கள் மற்றும் சாலையோரங்களில் கொட்டப்படும் குப்பைகளை சி.சி.டி.வி. கேமரா பொருத்திகண்காணித்திடவும் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் அலுவலருக்கு அறிவுத்தினார்.



தூத்துக்குடி அருகே கடல் நீர் திடீரென அரக்கு நிறமாக மாறியதால், அப்பகுதி மீனவர்கள் அச்சத்தில் மூழ்கியுள்ளனர்.

# முன் பகை காரணமாக ஒரு வாலிபரை சுத்துபோட்டு தாக்கும் வீடியோ வைரல்!

## வாலிபர் மருத்துவமனையில் அனுமதி!!



திருப்பத்தூர்,அக்.28

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த பெருமாபட்டு கிராமத்தில் மேல் தெரு, கீழ் தெரு என இரண்டு தெருக்கள் உள்ளது. இந்த நிலையில் மேல் தெரு பகுதியைச் சேர்ந்த சரவணன் மகன் மதன்குமார் (19) என்ற வாலிபர் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு கீழ் தெரு பகுதிக்கு சென்று அங்கு தனது நண்பனின் பிறந்த நாள் விழாவை கொண்டாடியுள்ளார் இந்த நிலையில் அங்கு இரு தரப்பினருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக மதன் குமார் மீது கீழ் தெரு பகுதியை சார்ந்த வாலிபர்கள் கோபத்தில் இருந்ததாக கூறப்படுகிறது.அதனைத் தொடர்ந்து நேற்று இரவு அந்த வழியாக சென்ற மதன் குமாரை கீழ் தெரு பகுதியைச் சேர்ந்த வாலிபர்கள் வழிமறித்து தகராறில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது அதன் பின்னர் கைகலப்பாக மாறியதில் மதன்குமாரை வாலிபர்கள் சுத்துப்போட்டு சாரா மாறியாக தாக்கி உள்ளனர். இதனால் காயமடைந்த மதன்குமார் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.இந்த நிலையில் மதன்குமாரை தாக்கும் வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது மேலும் இந்த சம்பவம் குறித்து குரிசிலாப்பட்டு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.